# ரயில் பயணியருக்கு இலவச மருத்துவ முகாம்

**சென்னை, அக். 27–**

உலக மூட்டு வலி தினத்தையொட்டி, மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில், பயணியருக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை – டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



இந்த ரயில்களில் பயணியர் வருகையை அதிகரிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம், பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இதையொட்டி, உலக மூட்டு வலி தினத்தையொட்டி, மெட்ரோ ரயில் பயணியருக்கு, திருமங்கலம் நிலையத்தில், நேற்று முதல், மூட்டு வலிக்கான இலவச மருத்து முகாம் துவங்கியது; இன்று, நிறைவு பெறுகிறது.

இதில் மருத்துவ ஆலோனை, பிசியோதெரபி ஆலோசனை, பரிந்துரை சீட்டு, சலுகை உறுப்பினர் அட்டை உள்ளிட்டவை வழங்கப்படும்.

இந்த முகாமில், பிரபல மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் பங்கேற்று, இலவச சிகிச்சை அளிக்கின்றனர்.